**களுத்துறை பிரதேச சபை - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

களுத்துறை பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பா் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க களுத்துறை பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுப்பிற்குள்ளாக்கப்படுகின்றது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய

ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை. | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நியமத்தின் பந்தி இலக்கம் 3.30 இன் பிரகாரம் காசு பாய்ச்சல் கூற்றில் நிதி செயற்பாடுகளின் கீழ் நிறுவனமொன்றின் பங்களிப்பான மூலதனம் மற்றும் கடன் பெறுவனவு அளவு காண்பிக்க வேண்டியிருந்த போதிலும் ஆண்டின் போது கிடைத்த ரூபா 10,663,787 ஆன மூலதன மானியம் ரூபா 112,115 ஆக காண்பிக்கப் பட்டிருந்தது. | எதிர்காலத்தில் காசுப் பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்படும். | தொடர்புடைய நியமத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) நியமத்தின் பந்தி இலக்கம் 6.10 மற்றும் 6.11 இன் பிரகாரம் | சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்படும் வரை | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | சபையினால் முன்னைய ஆண்டுகளைப் போன்று மீளாய்வாண்டிற்காகவும் நிலையான சொத்துக்களுக்காக பெறுமானத்தேய்வு சீராக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | பெறுமானத்தை கணிப்பிட முடியாதிருந்தது. | |
| (இ) | நியமத்தின் பந்தி இலக்கம் 18.7 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் போது ஆதனங்கள் மற்றும் பொறிகள் உபகரணங்களின் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியை பயன்படுத்துதல் நியமனத்திற்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்குமாறு கருதப்பட்ட போதிலும் சபையினால் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிலையான சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதற்கு நிதி செலுத்துதல் வசதியனமாக இருந்தது. | - மேற்படி - |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 5,560,061 ஆன நூலக புத்தகங்கள், ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்வதற்கு பதிலாக நடைமுறை சொத்தின் கீழ் இருப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் தவறை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் கிடைத்த மூலதன மானியம் ரூபா 10,663,787 விரிவான வருமான கூற்றில் ஏனைய விரிவான வருமானத்தின் கீழ் காண்பிப்பதற்கு பதிலாக மீண்டெழும் அல்லாத செலவினத்திற்காக அரசாங்கத்தில் இருந்து கிடைத்த மாற்றல்களாக வருமானத்தில் இனங்காணப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 03 கணக்கு விடயங்களின் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற மீதிக்கும் அவற்றிற்குரிய பட்டோலைகளில் காண்பிக்கப்படுகின்ற மீதிக்கும் இடையே ரூபா 259,810 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | 2024 இன் கணக்குகள் தயாரிக்கும்போது நாட்குறிப்புக்களின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.4 தொங்கல் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல வருட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற உள்ளக பண மாற்றல்கள் கணக்கில் காணப்படுகின்ற ரூபா 1,435,668 செலவு மீதியை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தொங்கல் மீதி தீர்த்து வைக்கப்படல் வேண்டும். |

### 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2022 செப்டம்பர் 06 ஆந் திகதிய இலக்கம் 2296/05 என்ற அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தின் ஏற்பாடுகள் அமுல்படுத்தப்படாமை. | (i) புதிய சபை அதிகாரப் பிரதேசம் மற்றும் உறுப்பினர் படிகள் மாற்றமடைந்தமை தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வில்லை. | பதிலளிக்கப்பட வில்லை. | தொடர்புடைய வர்த்தமானியின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | (ii) 2023 மார்ச் 20 ஆம் திகதி முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரை களுத்துறை மாநகர சபைக்குரிய அறவிடவேண்டிய ஆதன வரி வருமானம் இனங்காணாமையினால் | - மேற்படி - | கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | களுத்துறை மாநகர சபைக்கு அறவிடவேண்டிய ஆதன வரி வருமானமும் களுத்துறை பிரதேச சபையின் வருமானமாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| | | (iii) 2023 மார்ச் 20 ஆம் திகதி முதல் களுத்துறை மாநகர சபைக்குரியதாக அறவிடவேண்டிய சொத்துக்களின் அளவை குறித்துரைத்தவாறு இனங்கண்டு கையளிப்பதற்காக மீளாய்வாண்டின் இறுதி வரையும் நடவடிக்கை எடுக்காமையினால் களுத்துறை பிரதேச சபைக்குரிய சொத்துக்கள் நிதிக் கூற்றுக்களில் சரியாக வெளிப்படுத்தப்பட வில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஆ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134(1) ஆம் பிரிவு | புதிய ஆதன வரி மதிப்பீடு மேற்கொள்வதற்காக 2019 ஆம் ஆண்டில் பிரதம அமைச்சரின் அங்கீகாரம் கிடைத்து இருந்த போதிலும் நடப்பாண்டில் ஆகவும் 2013 ஆண்டின் மதிப்பீட்டின் அடிப்படையில் வரி அறவிடப்பட்டிருந்தது. | உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் ஆலோசனை கிடைக்கப் பெற்றவுடன் மீள் திருத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கபடும். | தொடர்புடைய விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2014 ஒக்ரோபர் 17 ஆம் திகதிய இலக்கம் 02/2014 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் 03 பந்தி | மீளாய்வாண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. | - மேற்படி - |
| (ஈ) | 2019 திசம்பர் 24 ஆம் திகதிய இலக்கம் 2155/08 என்ற வர்த்தமானி பத்திரத்தின் விதி இலக்கம் 42 | சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக வருடாந்த மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | தற்போது மெய்மையாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | - மேற்படி - |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 44,290,949 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 50,962,414 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2023 | | | | 20212 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட் ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | 9,482,276 | 9,503,429 | 13,044,149 | 8,044,149 | 9,483,183 | 9,479,741 | 8,537,184 | 12,208,751 |
| (ii) | வாடகை | 257,400 | 315,400 | 315,400 | - | 270,000 | 270,000 | 294,500 | - |
| (iii) | அனுமதி ப்பத்திரக் கட்டணம் | 1,554,600 | 1,713,750 | 1,713,750 | - | 440,000 | 415,175 | 415,175 | - |
| | மொத்தம் | 11,294,276 | 11,532,579 | 15,073,299 | 8,044,149 | 10,193,183 | 10,164,916 | 9,246,859 | 12,208,751 |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) ஆதனவரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டின் டிசம்பர் 31 இல் உள்ளவாறு ஆதன வரி கால பகுப்பாய்வின் பிரகாரம் 03 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான ஆதன வரி | நிலுவை வரியினை அறவிடுதல் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிலுவை ரூபா 2,032,961 தொகையும், 05 இற்கும் 10 வருடங்களுக்கும் இடையிலான நிலுவை ரூபா 2,336,619 மற்றும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை ரூபா 1,039,021 ஆகவும் இருந்தது. | | |

**(ஆ) ஏனைய வருமானம்**

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும், ஏனைய அதிகாரத் தரப்பினரிடம் இருந்தும் 2023 திசம்பர் 31 இல் கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 61,514,857 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 208,006,586 ஆகும். | 2020 ஆம் ஆண்டிற்கு உரிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பெறவேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 மே 31 ஆம் திகதி முடிவடைகின்ற வகையில் சபை அதிகாரப் பிரதேசத்திற்குரிய வீதிகள், மின் விளக்குகள் மற்றும் வடிகாண் முறைமை தொடர்பாக பூகோள தரவு முறைமை ஒன்றை தயாரிப்பதன் மூலம் வரைபடமாக்குவதற்காக 2022 சனவரி 11 ஆம் திகதி நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் சபை உடன்படிக்கை செய்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நகர அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து உரிய உரிய பணிகள் பூர்த்திசெய்யப்படாதிருந்ததுடன், காலம் நீடிக்கப்பட்டு புதிய உடன்படிக்கை கைச்சாத்திடலும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | எஞ்சியுள்ள அதிகாரப் பிரதேசத்திற்காக புதிய உடன்படிக்கையின் கீழ் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் பூர்த்தி செய்யப்பட்ட | மிகுதி நடவடிக்கைகள் | கடன் மீதி தீர்த்து வைக்கப்படல் |

| | | |
|---|---|---|
| 04 செயற்திட்டங்களுக்காக செலுத்த வேண்டிய கூட்டுமொத்தமாக ரூபா 537,087 கடன் மீதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்ளப்படுகின்றது. | வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபைக்குச் சொந்தமான 28 காணிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | வரைபடம் இல்லாத காணி கட்டிடங்களை அளவிடல் நடவடிக்கைகள் மேற்கொண்டு வரைபடங்களை தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | சபைக்கு சொந்தமான சொத்துக்களை சரியாக இனங்கண்டு பதிவேடுகளுக்கு கொண்டுவரல் வேண்டும். |
| (ஆ) சபை அதிகார பிரதேசத்தில் காணப்படுகின்ற 17 மயான நிலங்களை சபைக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதேச செயலாளர் ஊடாக கையளிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளபடுகின்றது. | மயான நிலங்களை சபைக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2023 சனவரி முதல் ஆகஸ்ட் வரை வீதி விளக்கு தொகுதிகள் மற்றும் பராமரிப்பு பொருட்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 2,571,050 செலவிடப்பட்டிருந்த போதிலும் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் மாதிரிகளுக்கு இணங்கி இருந்ததா என தொழில்நுட்ப மதிப்பீடு குழுவினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 2023 ஆகஸ்ட் மாதத்தின் பின்னர் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கை அடிப்படையாக கொள்ளப்பட்டுள்ளது. | தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவின் உறுதிப்படுத்தலை பெற்று கொள்வனவு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டில் டோனர் கொள்வனவு செய்யும் போது தனியார் நிறுவனமொன்று சமர்ப்பித்த ரூபா 6,700 ஆகக்குறைந்த விலை நிராகரிக்கப்பட்டு ரூபா 43,580 ஆன உயர்ந்த விலை சமர்ப்பித்த தனியார் நிறுவனமொன்றுக்கு கேள்வி கையளித்தமையினால் ரூபா 368,850 நட்டம் ஏற்பட்டிருந்தது. | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்காக அனுப்பப்பட்டுள்ளதுடன் அந்த அறிக்கை கிடைத்த பின்னர் கொள்வனவு செய்யப்படும். | பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |